## August 14, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கெடுதேதியான ஆகஸ்ட் மாத இறுதிக்குள் மேற்கத்திய நாடுகளுடன் ஈரான் புதிய அணுசக்தி பேச்சுவார்த்தையைத் தொடங்கி, ஐ.நா. அணுசக்தி கண்காணிப்பு அமைப்புடன்(ஐஏஇஏ) ஒத்துழைப்பு மேற்கொள்ளாவிட்டால் அந்த நாட்டின் மீது மீண்டும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி (இ3) ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் எச்சரித்துள்ளனர்.
2. நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷியா கடந்த 2022 பிப்ரவரி மாதம் படையெடுத்து, டொனட்ஸ்க், லுஹான்ஸ்க், ஸபோரிஷியா கெர்சான் ஆகிய கிழக்கு மாகாணங்களின் கணிசமான பகுதிளைக் கைப்பற்றியது.
3. இந்தியா 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்த விருப்பம் தெரிவித்திருக்கும் நிலையில், இந்திய ஒலிம்பிக் சங்கம் (ஐஓஏ) அதற்கு அதிகாரபூர்வ ஒப்புதல் வழங்யைது.
   i. இந்நேர்வு தொடர்பான முன்மொழிவை 31-ஆம் தேதிக்குள்ளாக சமர்ப்பிக்க வேண்டும். கிளாஸ்கோவில் நவம்பரில் நடைபெறவுள்ள காமன்வெல்த் விளையாட்டுகளுக்கான பொதுக் கூட்டத்தில், 2030 போட்டிகளை நடத்தும் நாடு முடிவு செய்யப்படும்.
4. ஹங்கேரியில் நடைபெற்ற கிராண்ட்ப்ரீ தடகள போட்டியில் பங்கேற்ற இந்தியாவின் குல்வீர் சிங், ஆடவர் 3,000 மீட்டர் ஓட்டத்தில் தேசிய சாதனையை முறியடித்தார். ஆடவருக்கான 5,000 மீ, 10,000 மீ பிரிவுகளிலும் அவரே தேசிய சாதனையாளராக இருக்கிறார்.
5. ஐ.நா. பொதுச் சபையின் 80-ஆவது ஆண்டு கூட்டம் செப்டம்பர் மாதம் தொடங்குகிறது. இதில் 23 முதல் 29-ஆம் தேதி வரை உயர்நிலை பொது விவாதம் நடைபெறுகிறது. இதில் 23-ஆம் தேதி அமெரிக்க அதிபர் டிரம்ப் பேசுகிறார். அவர் அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாகப் பதவி யேற்ற பிறகு ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் முதல்முறையாகப் பேச இருக்கிறார்.
   i. இந்தியா, இஸ்ரேல், சீனா, பாகிஸ்தான், வங்கதேச உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் செப்டம்பர் 28-ஆம் தேதி உரையாற்றுவார்கள் என்று ஐ.நா. சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுவார் என்று தெரிகிறது.
6. காசோலைகளை வங்கிகளில் சமர்ப்பித்த சில மணி நேரங்களில் வாடிக்கையாளர்களின் கணக்கில் பணத்தைச் செலுத்தும் புதிய நடைமுறையை அக்டோபர் 4-ஆம் தேதி முதல் ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்த உள்ளது.
   i. தற்போதுள்ள நடைமுறையில் வங்கிகள் ஒரு நாளில் பெறப்பட்ட அனைத்து காசோலைகளையும் மொத்தமாக சேர்த்து, குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பரிவர்த்தனைக்கு அனுப்புகின்றன. இதனால், காசோலைக்கான பணம் வாடிக்கையாளர்களின் கணக்குக்கு வர ஒன்று அல்லது இரண்டு நாள்கள் ஆகின்றன.

7. நாட்டின் 79-ஆவது சுதந்திர தினம் (ஆக.15) கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது. தில்லியில் வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றவுள்ளார்.
8. மக்கள் பிரதி நிதித்துவச் சட்டம் 1950 மற்றும் வாக்காளர் பதிவு விதிகள் 1960 ஆகியவை அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 326-ஐ அமல்படுத்துகின்றன. அவை வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, அதனைத் திருத்துவது தொடர்பான நடைமுறைகளை வழங்குகின்றன. ஆனால், வாக்காளர்களைத் தகுதி நீக்கம் செய்வதில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 326-இல் உள்ளதைத் தாண்டி செயல்படுவதில்லை. அரசமைப்புச் சட்டப்படி அவ்வாறு செயல்படவும் முடியாது.

9. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**
    i. நிஹால் சரின் - இந்திய சதுரங்க வீரர்
    ii. ஷேக் ஹசீனா - வங்காளதேசத்தின் முன்னாள் ஜனாதிபதி